## சுருக்கம்

பணியமைப்பு – மூன்றாம்நிலை நகராட்சிகளில் பணிபுரியும் 25 தொழில்நுட்ப உதவியாளர்களை பணி ஆய்வராக நியமனம் செய்து, அவர்களின் பணியை வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

**அரசாணை (நிலை) எண்.73** **நாள்:20.05.2009.**

**படிக்கப்பட்டன:–**

1. தொழில்நுட்ப உதவியாளர்கள், மூன்றாம்நிலை நகராட்சிகள் மனு நாள் 24.06.2008.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க. எண்.37054/2007/எஸ்.4, நாள் 26.03.2008 மற்றும் 15.10.2008.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மனுவில், மூன்றாம் நிலை நகராட்சியில் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் பணியாளர்கள், தாங்கள் கடந்த 11 ஆண்டுகளாக பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் தினக்கூலி அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக தொடர்ந்து பணிபுரிந்து வருவதாகவும், தற்போது பேரூராட்சி துறையில் தங்களுடனும், தங்களுக்கு பிறகும், தொழில்நுட்ப உதவியாளர்களாக பணிபுரிந்து வருபவர்களின் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, மூன்றாம் நிலை நகராட்சிகளில் தொடர்ந்து பணிபுரிந்து வரும் தங்களின் பணியையும் நிரந்தரம் செய்ய உரிய வழிவகையினை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

2) மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதங்களில், மூன்றாம்நிலை நகராட்சிகளில் 29.11.2001 வரை தொழில்நுட்ப உதவியாளர்களாக தொடர்ந்து பணிபுரிந்து வரும் 25 நபர்களின் பட்டியலை அரசுக்கு அனுப்பி, மேற்படி பணியாளர்களின் வயது வரம்பு குறித்த விதி, வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் மற்றும் இன சுழற்சி ஆகியவை குறித்த விதிகளிலிருந்து விலக்களித்து அரசாணை வழங்குமாறு கோரியுள்ளனர்.

3) நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின்னர், மூன்றாம்நிலை நகராட்சிகளில் பணிபுரியும் இணைப்பில் கண்டுள்ள 25 தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிநியமனம் தொடர்பாக வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமைக்கு மற்றும் வயது வரம்பு குறித்த விதிகளை தளர்வு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இனசுழற்சி விதியினை

பின்பற்றி அவர்களை நகராட்சிகளில் பணி ஆய்வர்கள் (Work Inspector) பணியிடங்களில் ரூ.2650–3300–70–4000 என்ற ஊதிய விகிதத்தில் ஈர்த்து நியமனம் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது:–

(i) தற்போதுள்ள காலிப்பணியிடங்களில் மட்டுமே மேற்படி பணியாளர்கள் ஈர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ii) இதற்கென மிகைப்பணியிடங்கள் ஏதும் உருவாக்கப்படக் கூடாது.

(iii) போதுமான பணியிடங்கள் இல்லாத நிலையில், மேற்படி பணியாளர்களை காத்திருப்போர் பட்டியலில் வைத்து, காலிப்பணிடங்கள் ஏற்படும்போது நியமனம் செய்யலாம்.

(iv) மேலும் 29.11.2001 முன்னர் வரை தொழில்நுட்ப உதவியாளர்களாக பணியமர்த்தப்பட்டு 10 வருடம் பணி முடித்த பணியாளர்கள் மட்டுமே மேற்படி பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்.

4) இவ்வரசாணை தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு மற்றும் நிதித் துறைகளின் முறையே அ.சா.எண்.36252/ட்டி1/08–1, நாள் 28.10.2008 மற்றும் 188/FS/P/08, நாள் 24.01.2009–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 600 108.
செயல் அலுவலர்கள், மூன்றாம்நிலை நகராட்சி.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 600 108.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**<u>பிற்சேர்க்கை</u>**

| வ.எண். | பெயர்<br>திருவாளர்கள் / திருமதி | மண்டலம் | தற்போது பணியாற்றும்<br>நகராட்சியின் பெயர் | பணியில்<br>சேர்ந்த நாள் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | எஸ்.சிவகுமார் | சேலம் | நரசிங்கபுரம் | 08.02.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 2. | பி. கோமதி நாயகம் | திருநெல்வேலி | அம்பா சமுத்திரம் | 01.03.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 3. | கே. பாலசுப்பிரமணியன் | தஞ்சாவூர் | வேதாரனியம் | 01.07.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 4. | ஆர். வெங்கட்டகிரி | செங்கல்பட்டு | மதுரவாயல் | 25.03.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 5. | வி. ஸ்ரீனிவாசன் | வேலூர் | சத்துவாச்சாரி | 01.05.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 6. | எஸ். கார்த்திக் | சேலம் | இனாம் கரூர் | 23.05.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 7. | எஸ். கார்த்திகேயன் | வேலூர் | ஜோலார்பேட்டை | 01.07.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 8. | ஆர். லக்ஷ்மணன் | செங்கல்பட்டு | பூவிருந்தவல்லி | 01.07.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 9. | சே. சசிகலா | திருப்பூர் | வீரப்பன் சத்திரம் | 01.09.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 10. | ஜி. சாகுல் அமீது | திருப்பூர் | வீரப்பன் சத்திரம் | 01.09.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 11. | வி. முத்துவேல் | திருப்பூர் | வால்பாறை | 13.09.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 12. | ஜி. ஷண்முகம் | வேலூர் | தாராபடவேடு | 01.10.1997 | பி.ஈ. தேர்ச்சி |
| 13. | எம். செல்வவினாயகம் | மதுரை | அவனியாபுரம் | 05.10.1997 | டி.சி.ஈ. தோல்வி |
| 14. | டி. பாலகிருஷ்ணன் | திருநெல்வேலி | திருத்தங்கல் | 06.10.1997 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 15. | எஸ்.டி. சோமசுந்தரம் | திருப்பூர் | புஞ்சைபுளியம்பட்டி | 22.12.1997 | பி.ஈ. தேர்ச்சி |
| 16. | எம். ராமகிருஷ்ணன் | திருப்பூர் | கூடலூர் | 21.01.1998 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 17. | வி.எம். ரவிகலா | திருப்பூர் | நெல்லியாலம் | 01.04.1998 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 18. | பி. ரமேஷ் | மதுரை | திருப்பரங்குன்றம் | 15.05.1998 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 19. | பி. விஜய்கார்த்தி | தஞ்சாவூர் | துவாக்குடி | 21.05.1998 | டி.சி.ஈ. மற்றும் பி.டெக். தேர்ச்சி |
| 20. | ஜெ. சிவபாக்கியம் | திருப்பூர் | வேலம்பாளையம் | 21.07.1998 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 21. | டி. சாந்தகுமார் | வேலூர் | பெர்ணாம்பட்டு | 01.10.1998 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 22. | ஆர். சரவணன் | திருப்பூர் | நெல்லியாலம் | 05.05.1999 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 23. | என். தமிழரசன் | வேலூர் | மேல்விஷாரம் | 11.06.1999 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 24. | ஜி.கே. பிரகாஷ் | செங்கல்பட்டு | உள்ளகரம் புழுதிவாக்கம் | 14.08.2000 | டி.சி.ஈ. தேர்ச்சி |
| 25. | டி. அருண் | செங்கல்பட்டு | பம்மல் | 01.09.2001 | பி.ஈ. தேர்ச்சி |

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்